2. அறிவிப்புகள் தொடர்ச்சி.

(உ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30-3-1971- செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 30-3-1971 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2-4-1971, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதின்மூன்றுக்கு மேற்படுமாயின் 3-4-1971 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "1950-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலைய விதிகளின் 2(1)( )-வது விதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று, இப்பேரவை 1948-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1948) 2-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30—3—1971 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 30—3—1971, செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1971 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 3—4—1971 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) 1970-71 ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அளித்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்றத் தலைவர் அவர்களே! 1970-71-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். இத்துடன் மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 56.19 கோடியாகும். இதில் ரூ. 32.69 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் பட்டதாகும். எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சார்ந்ததாகும்.

இம்மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளுக்கான தொகை சற்றே பெரும் அளவினதாக உள்ளது என்பதில் ஐயமில்லை. கடந்த ஜனவரித் திங்களில் சட்ட மன்றப் பேரவை கலைக்கப்பட்ட காரணத்தால், ஒவ்வோர் ஆண்டும் அத்திங்களில் இயல்பாகச் சட்ட மன்றத்தின்முன் வைக்கப்படும் இரண்டாவது துணை மதிப்பீடுகளை இந்த ஆண்டு வைக்க ஏலாமல் போய்விட்டது. 1970 ஆகஸ்ட் திங்களில் நிறைவேற்றப்பட்ட முதல் துணை மதிப்பீடுகளுக்குப் பின்னர் ஒப்பு அளிக்கப்பட்ட புதுத் திட்டங்களுக்கான செலவையும், பல்வேறு துறைகளுக்கு தற்போதைய நிலவரப்படி பற்பல தலைப்புகளின்கீழ் தேவைப்படுகின்ற கூடுதல் நிதி ஒதுக்கங்களின் அளவையும் இத்துணை மதிப்பீடுகள் எதிரொலிக்கின்றன. மானியக் கோரிக்கைகள் அனைத்தையும் விளக்கும் விவர அறிக்கை ஒன்று மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் முன்பு வைக்கப்பட்டிருப்பதால், தற்போது வேண்டப்படும் பல்வேறு நிதி ஒதுக்கங்கள் பற்றிய முழு விவரங்களையும் விரிவாக எடுத்தியம்ப வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான சில இனங்களைப் பற்றி மட்டும் இம்மன்றத்தின் நாட்டத்தை ஈர்க்க விழைகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் 7-வது மானியத்தின் கீழ் ரூ. 140 லட்சம் கேட்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது அண்மையில் நடந்த இடைக்காலத் தேர்தல்கள் குறித்த செலவினங்களை ஒட்டியதாகும். 1970-71-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கும் வேளையில் இச் செலவு எதிர்பார்க்கப்படவில்லை.